# திருநாரணன் திருவந்தாதி



**ஸ்ரீதேவி நாயிகா சமேதே ஸ்ரீமூர்த்தி பரப்ரஹ்மணே நம :**

விண்டவரும் காண விரும்பும் வடிவழகந்தன்னை
கண்டவர்தம் மனம்விட்டு அகலாத மாயவனை
சங்கொடு சக்கரம் ஏந்தும் பங்கயக்கண்ணானை
பொங்கிடும்காதலோடு சாளக்கிராமம் சென்றடைநெஞ்சே !!

**ஸ்ரீதேவி நாயிகா சமேதே ஸ்ரீமூர்த்தி பரப்ரஹ்மணே நம :(2)**

அடைவாய் நன்னெஞ்சே சாளக்கிராமத் தீசனை
கடைந்தகடல் தோன்றிய இலக்குமி மணாளனை
பொலிந்த துளவமாலை துலங்கும் மார்பனை
மலிந்த இராக்கதர் குலமொழித்த வீரனை
நலந்தமில்லதோர் நாட்டின் இறைவனை
நலந்தரும் நாரண நாமமே பேசி !!

**கற்பகவல்லி நாயிகா சமேத அம்ருத (அற்புத) நாராயண பரப்ரஹ்மணே நம :**

நாரண நாமமொன்றே பேசுவாய் நன்னெஞ்சே
பூரணனை புண்ணியனை பூமகள் கேள்வனை
காரணனை கருமுகிலை கடித்தானத்து அற்புத
நாரணனை நன்மொழியால் நாளும் வியந்து !!

**பத்மாசனி நாயிகா சமேத பார்த்தசாரதி பரப்ரஹ்மணே நம :**

வியந்தேயென் தந்தைதந்தைதன்மூத்தப்பன் இடம்சென்றே
நயந்தே நாரண நாமம் உரைத்தேன் - குறளப்பன் அகம்
மகிழ்ந்தேதன் சேவடியென் சென்னியிற் பொறித்தான் -உடன்
தொலைத்தேன் பிறப்பிறப்பு - இனியென் வேண்டுவனே !!

**வாத்ஸல்யவல்லி நாயிகா சமேத காட்கரையப்பன் திருவடிகளேசரணம்**

வேண்டுவதொன்றின்மையை வேண்டுவதாய் அளித்தவனை

தாண்டுவதொன்றில்லா தனைத்தும் தாண்டிய தேவனை மாயனை
யாண்டும் இடும்பையிலா தாளளித்த தயாபரனை
மீண்டு வரவொண்ணா காட்கரையுட் கண்டேனே!

**மதுரவேணி நாயிகா சமேத ஸ்ரீசுக்தநாத (மொழிக்கள நாத) பரப்ரஹ்மணே நம :**

கண்டனன் கண்ணனை கார்வண்ணனை
அண்டரண்ட பகிரண்டமுண்ட வாயனை
வண்டுலாம் பொழில்சூழ் மூழிக்களத்தானை
விண்டனன் மீண்டும் பிறக்கிலேனே! !

**வாத்சல்யதேவி நாயிகா சமேத ஸ்ரீவல்லப பரப்ரஹ்மணே நம :**

பிறக்கிலேன் என்றுரைத்த என்னை பிறக்கவைத்தடிமை கொண்டான்
மறக்கிலேன் என்றவன் நாமம்சொல்ல மறக்கவொண்ணா காட்சி தந்தான்
பிறக்கிலேன் பிறக்கவேண்டின் மறக்கிலேனவன் திருவடி என்றும்
செருக்கிலேன் சென்றடைந்தேன் திருவல்லபன் அடிக்கடியனாய் ! !

**பொற்கொடி நாச்சியார் சமேத மாயப்பிரான் திருவடிகளே சரணம் :**

அடிக்கடியாய் அடைந்தவனின் அஞ்ஞான இருள்நீக்கி
படிப்படியாய் பழவினைகள் பற்றறுத்து வழிகாட்டி
தினைத்துளியாம் எம்ஞானம் பனையுயரம் உயரவைத்து
எனையாளும் மாயப்பிரான் பாதங்கள் யாமுடைய பற்று ! !

**<u>கமலவல்லி நாயிகா சமேத பாம்பணையப்பன் திருவடிகளே சரணம்</u>**

பற்றினேன் பாற்கடல் பரமனை பாம்பணையனை
முற்றெம் வினைதீர வேதமேத்தும் விழுப்பொருளை
இற்றோடு ஏழ்பிறப் பொழித்த இன்னமுதை
பொற்றாமரையாள் கேள்வனை வண்டூரில் வணங்கி !!

**<u>செங்கமலவல்லி நாயிகா சமேத ஸ்ரீ இமயவரம்பன் திருவடிகளே சரணம் :</u>**

வணங்கியவனை வந்து மார்போடு சேர்த்தணைத்தான்
தயங்கினவனை தன் மடிமீதிருத்தி வைத்தான்
மயங்கியவனை மருள்நீக்கி மலர்த்தி வைத்தான்
இயம்புகேன் அவன் நாமம் இமயவரம்பனே!

இன்று பெருமான் என்னுள் வந்து அமர்ந்தான். உணர்ந்தேன். மிக எளிதாக காட்டினான். அமலனையும் ஆழ்வாரையும் பிரிந்த ஏக்கம். மனதை ஏதோ செய்தது. அவனே விடையிறுத்தான். முன்னர் தொடங்கிய திருநாரணன் திருவந்தாதியை முடிக்குமாறு பணித்தான். அடியேன் இதுவரை எழுதிய பாக்கள் எல்லாம் சென்று சேவித்த திவ்ய தேச எம்பெருமானை பற்றியே. இனி எங்கு தொடங்குவது? சென்றறியா இடத்தையும் பெருமானையும் எப்படி பாக்களில் சொல்வது என்றெல்லாம் நினைத்து பேதலித்து, சரி இதுவரை செய்தது எதுவும் அடியேனின் செயலில்லை என்று அவனடி தொழுது எங்கு எப்படி தொடங்குவது நினைத்தே கடைசி வார்த்தை தேடி (அந்தாதி அல்லவா முதல் வார்த்தைக்காக) போனேன். மலையாள திவ்யதேசத்து எம்பெருமானான இமயவரம்பனே என்று கடைசி வார்த்தை காட்டிக்கொடுத்தான். அங்கே (மலையாள தேசத்தில்) திருவண்பரிசாரம் சென்ற போது நடை அடைத்து விட்டபடியால் தரிசனம் செய்ய முடியவில்லை. அங்கே இருந்தது தொடங்கலாம் என்று நினைத்து தல வரலாறு பார்த்தால் தூக்கி வாரி போட்டது. நம்மாழ்வார் அவதார ஸ்தலமாம். அஞ்ஞானத்தால் குருகூர் தான் அவதார ஸ்தலம் என்று நினைத்திருந்தேன். அவருக்கு தானே அவரிடத்திலே வந்து சேவை சாதித்து பாசுரம் வாங்கிக்கொண்டான் எம்பெருமான். என்ன கருணை இந்த கடையேனிடத்தில். இதோ ஆழ்வாருக்கும் திருவாழ்மார்பனுக்குமான பாக்கள் :

**<u>நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.</u>**

இமையரும் இமைப்பரும் இணைந்தே வணங்கிடும்
இசையொடு இசைத்திடும் இன்னிசைத் தமிழ்மறை
தசையொடு என்பிசை பாயுரம் ஆயிரம்
நசையற நல்கிய நாயகன் வாழியே !!

**<u>கமலவல்லி நாயிகா சமேத திருவாழ்மார்பன் திருவடிகளே சரணம் :</u>**

வாழி வாழி திருமகள்வாழ் திருமார்பன்
வாழி வாழி வண்பரிசாரத் திருமாறன்
வாழி வாழி அவனடியார் அவர்க்கடியார்
வாழி வாழி திருவுடனே திருவாய்மொழியும் !!

**மலர்மங்கை நாச்சியார் சமேத முகுந்த நாராயணன் திருவடிகளே சரணம்**

திருவும் மருவும் உறையும் அழகனை
திருவும் களிரும் போற்றும் தலைவனை
பிறப்புப் பிணியை அறுக்கும் இறைவனை
மறவா தடைவீர் நாவாய் நகரில் !!

**பத்மாசனி நாயிகா சமேத ஸ்ரீ அபயப்ரத பரப்ரஹ்மணே நம :**
**வித்துவகோட்டுவல்லி நாயிகா சமேத ஸ்ரீ உய்யவந்த பெருமான் திருவடிகளே சரணம் :**

நகரெல்லாம் நாரணனாய் உகந்தே நிறைந்தானை - என்
மனதிற்கு மாமருந்தாய் மறைந்தே இருந்தானை - வெம்
சினத்தினால் செற்ற தேவனை வித்துவக்கோட்டனை
நினைத்திருந்தே வாழ்ந்திடும் என்வாணுதலே !!

**கமலவல்லி நாயிக சமேத அழகிய மணவாள பரப்ரஹ்மணே நம :**

என்னுள்ளத்தில் வந்தமர்ந்தான் உறையூரின் மணவாளன்
தன்னெட்டால் என்னாகம் குறையின்றி மிளிரவைத்தான்
எற்றைக்கும் பிரியேனென்றானைக் கண்டாயோ கமலவல்லி
சட்டென்றே மறைந்தானே !! என்செய்கேன் என்செய்கேன் !!

**செண்பகவல்லி நாயிகா சமேத புண்டரீகாக்ஷ பரப்ரஹ்மணே நம:**

என்செய்கேன் என்றவனை தன்னடிக்கீழ் இருத்திவைத்தான்
புன்செய் கொடுமனத்தை நன்னிலமாய் மாற்றி வைத்தான்
வெள்ளறையுள் நின்றவேந்தன் திருமகளோடு வந்துயெந்தன்
உள்ளறையுள் புகுந்தானை என்சொல்லி ஏற்றுவனோ !!

**பூரணவல்லி நாயிகா சமேத ஸ்ரீ புருஷோத்தம பரப்ரஹ்மணே நம :**
ஏற்றவன் கைதிருவோடு நிரைத்தனள் பூரணவல்லி
மாற்றிலை காண் என்றே பிரமனோடு ஈசனுமிருந்து
மற்றைத் தேவரோடு சேர்ந்தே போற்றுமிந்த
தோற்றமாம் உத்தமனை கரம்பனூரில் கண்டேனே!!

**அழகியவல்லி நாயிகா சமேத சுந்தரராஜ பரப்ரஹ்மணே நம :**

கண்டனன் அழகருக்கு அரசனை கண்களால்
மண்டுகமுனி, பிரமனோடு அமரரும் வியந்தே
கண்டதோர் எழில் காணக் கிடைத்திடின்
கொண்டதோர் வாழ்க்கை பயனுமதே காண் !

**கமலவல்லி நாயிகா சமேத அப்பாலரங்கன் திருவடிகளே சரணம்**

பயனல்லன் ஆகிலும் பாங்கல்லன் ஆயினும் - என்
செயல்நன்றாக திருத்தி பணிகொண்ட சடகோபன்;
வானேறிப்போகுமுன்னே பாடிவைத்தான் அப்பாலனை,
பேரேனென்றே என்நெஞ்சு நிறைத்தானை நினைந்தே
பேயேன் பெற்றேன் பெரும் பேறே !

**திருமாமகள் நாச்சியார் சமேத அருள்மாகடல் திருவடிகளே சரணம்:**

பேரையோடு எவ்வுள் கடல்மல்லை நீர்மலையும்
பேரரங்கதோடு அன்பில் ஆதனூர் கரம்பத்தினுள்ளும்
வாட்டாறு அனந்தபுரி புல்லணையுள் கிடந்தருளும்
காட்டாற்று அருளாளன் சிறுபுலியூர் அருள்மாகடலே !!

**அம்ருதநாயகி சமேத வாசுதேவ பரப்ரஹ்மணே நம :**

கடலாய் காற்றாய் நிலமாய் வானாய் நெருப்பாய்
உடலாய் உடலுயிராய் உள்ளுறை இறையாய்
இடராய் இடர்களை சுடராய் நிறைவாய்
மடலாய் உரைத்தேன் திருத்தங்கல் நாரணுக்கே !!

**கமலவாசினி நாயிகா சமேத ஸ்ரீ ஆண்டளக்குமைய்யன் திருவடிகளே சரணம்**

மடலாய் உரைத்தவென் மடநெஞ்சம் தானுருக
சுடலையானொடு எரியும் பசுவும் தன் பாவம்கெட
வேண்டியே ஆதனூரில் அடிபணிந்து வணங்கியநல்
ஆண்டளக்குமைய்யன் வந்தென் நெஞ்சு நிறைத்தனனே !!

**செண்பகவல்லி நாயிகா சமேத ஜெகன்னாத பரப்ரஹ்மணே நம :**

நெஞ்சு நிறைத்தவெம் எந்தை தன் நெஞ்சத்துள்
மஞ்சம் விரித்தே மாமகளை அமரவைத்தான்
நந்தியும் பிரமனும் தொழுதேத்தும் நாதனை
நந்திபுர விண்ணகரில்  நான் கண்டு கொண்டேனே  !!

**மரகதவல்லி நாயிகா சமேத ஸ்ரீ கோலவில்லி ராமன் திருவடிகளே சரணம்**

கொண்டல்வண்ணனை கோவலனை திங்கள் துயரருத்தானை
அண்டர்கோனை வெள்ளியங்குடி கிடந்த ஆரமுதை இராகவனை
எங்கள் குலத்தின்னமுதை ஏற்றமிகு எழிலுருவை
கண்களாரக் கண்டு நானுய்ந்து போனேனே !!

**தலைச்சங்க நாச்சியார் சமேத நாண்மதியப் பெருமாள் திருவடிகளே சரணம்**

நானுய்ந்தனன் நாரணனின் ஆயிரம் நாமமுரைத்தே
பாயுரமாய் பன்னிருவர் பாடிவைத்த பாவிசைத்தே
ஆயிரம் ஆயிரமாய் உரைத்திடுனும் - தலைச்சங்க
நாயகனை நாடிடின் நரகில்லை காண் !!

**திருமாமகள் நாச்சியார் சமேத சௌம்ய நாராயண பரப்ரஹ்மணே நம :**

நரகில்லை காண் நன்னெஞ்சே சௌம்யநாரணன் அடி தொழுதாற்கே
நரகில்லை காண் நன்னெஞ்சே கோட்டியூர்நம்பி பதம் பணிந்தாற்கே
நரகில்லை காண் நன்னெஞ்சே நம்மிராமானுஜன் அடி அடைந்தாற்கே
நரகில்லை நரகில்லை நரகென்று ஒன்றில்லை சத்தியமே !!

**<u>சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் சமேத ரகுநந்தன பரப்ரஹ்மணே நம :</u>**

சத்தியமாய் சரணடைந்தேன் அயோத்தியர்கோன் அடியிணையில்
முத்தமிழ் பாமாலை சூடிவைத்தேனவன் திருமுடியில்
புற்பாமுதலாய் விண்ணுலகேற்றிய வேந்தன் திருவடியில்
கற்களாய நெஞ்சினேன் கரைந்தே !!

**<u>ஸ்ரீ ஹரி லக்ஷ்மி நாயிகா சமேத தேவராஜ பரப்ரஹ்மணே நம :</u>**

கரையவைத்தான் கரையவொண்ணா கல்நெஞ்சன் என்மனத்தை
உரைக்கவைத்தான் உலகத்தோர் தன்சரிதம் அறிவதற்காய்
நிறைந்திருந்தான் நீக்கமற காடு மலை நதியும் வெளியுமாய்
மறைந்திருந்தே ஒளிர்ந்தான் நைமிசாரத்துள் என் எந்தை !!

**என்னைப் பெற்ற தாயார் சமேத பக்தவச்சல பரப்ரஹ்மணே நம :**

எந்தையும் தாயுமாய் என்னைப் பெற்றவளாய்
முந்தைப் பழவினைகள் முற்றும் பற்றறுத்து
விந்தைகள் பலபுரிந்தே நின்றவூர் நின்றானை - என்
சிந்தைச் சிறையிலிட்டேன் இனியென் வேண்டுவதே !!

**<u>ஸ்ரீ பூமி நீளா சமேத க்ஷீராப்தி நாத பரப்ரஹ்மணே நம :</u>**

வேண்டுவது வேண்டாமை இல்லாதவன் என்சிரம்
தீண்டாமல் தீண்டியேயென் பிறப்பிறப்பு ஒழித்தனன்
பிறக்கிலேன் பிறக்க வேண்டின் நின்திருவடியை
மறக்கிலேன் பாற்கடல் அரவணைப் பள்ளிகொண்டானே !!

**பெரிய பிராட்டியார் சமேத பரமபத நாதன் திருவடிகளே சரணம் :**

பள்ளிகொண்டானை பரமனை பாற்கடல் நாதனை -என்
உள்ளத்துள் உள்ளானை உயர்வினுக்கு உயர்வினை - சொல்
வண்ணத்துள் சொல்லவொண்ணா பெரும் சோதியை - நீள்
விண்ணாளும் வைகுந்தனடியார்க்கு அடியானோம் - இனி
என்வேண்டுவனே !!